# RECORD OF DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | OS.No.28 of 2021 | **DW - 1** | : | Cross |
| **Name** | பீமராஜி | **Father Name** | : | பெருமாள் கவுண்டர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 28.04.2026 administered by District Munsif, Uthangarai.

**துவக்க நேரம் -04.04 PM**

**குறுக்கு விசாரணை:**

நான் ஊத்தங்கரை காமராஜ் நகரில் குடியிருந்து வருகிறேன். அங்கு தான் எனது வீடு உள்ளது. அது என்னுடைய சொந்த வீடு. என்னுடைய வீடு சேலம் முதல் திருப்பத்தூர் செல்லும் தேசிய நெடுஞ்சாலைக்கு கிழக்கில் உள்ளதா மேற்கில் உள்ளதா என்றால் கிழக்கில் உள்ளது. தேசிய நெடுஞ்சாலையிலிருந்து பெரியார் நகர் செல்லும் பாதையில் சென்று முதல் வலதுபுற குறுக்கு சந்தில் பிரிந்து செல்ல வேண்டும். பெரியார் நகர் செல்லும் பாதை சிமெண்ட் பாதை அதிலிருந்து வலது புறம் பிரிந்து செல்லும் பாதையும் சிமெண்ட் பாதை தான். அந்த சிமெண்ட் பாதை வழக்கறிஞர் திரு. முனுசாமி அவர்கள் வீடு வரை சென்று முடிகிறது அதன் நீளம் எவ்வளவு என்றால் 137அடி. அந்தப் பாதை அகலம் எவ்வளவு என்றால் தற்போது 10 அடி அகலம் உள்ளது. மேற்படி சிமெண்ட் பாதைக்கு மேற்குபுறம் தான் என்னுடைய வீடு உள்ளது என்று சொன்னால் சரிதான். என்னுடைய வீட்டின் கேட்டிர்க்கும் சிமெண்ட் பாதைக்கும் இடையில் எவ்வளவு இடைவெளி உள்ளது என்றால் சிமெண்ட் பாதையை ஒட்டினார் போல் தான் என்னுடைய வீட்டின் கேட்டு உள்ளது. என்னுடைய வீடு காமராஜ் நகரை சார்ந்துள்ளது மேற்படி சிமெண்ட் பாதையானது பெரியார் நகரை சார்ந்தது. அந்த 10 அடி சிமெண்ட் பாதையில் எனக்கு உரிமை பாத்தியம் எதுவும் இல்லையா என்றால் உள்ளது. அதில் எவ்வளவு உங்களுக்கு பாத்தியம் என்றால் 274 சதுர அடி பாத்தியம். நான் வீடு கட்டியுள்ள இடம் விலைக்கு வாங்கிய இடம். எந்த வருடம் வாங்கினேன் என்றால் 13.09.1978 யாரிடமிருந்து வாங்கினேன் என்றால் மாலிக் பாஷா என்பவரிடமிருந்து வாங்கினேன். மாலிக் பாஷா என்பவருக்கு மேற்படி சிமெண்ட் பாதையும் அந்த பகுதியில் உள்ள பல சொத்துகளும் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். நான் அவரிடம் பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின் மூலம் தான் வாங்கினேன்

என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பதில் உரையில் மாலிக் பாஷா என்பவரிடமிருந்து நான் சொத்தை வாங்கி வீடு கட்டி உள்ளேன் என்று சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். எந்த கிரய ஆவணத்தின் படி எந்த நீள அகலத்திற்கு வாங்கியுள்ளேன் என்று சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். அந்த கிரைய ஆவணத்தை ஒப்படைத்துள்ளேனா என்றால் இல்லை நீதிமன்றத்தில் கேட்டால் ஒப்படைக்க தயாராக உள்ளேன். என்னுடைய பதிலுறையில் சிமெண்ட் ரோட்டில் எனக்கு பாதிக்கப்பட்ட 274 சதுர அடி நிலம் உள்ளதாக சொல்லி உள்ளேனா என்றால் இல்லை. நான் எத்தனை அடி அகலத்தில் சொத்தை வாங்கினேன் என்றால் கிழக்கு புறம் 94 அடி மேற்கு புறம் 91 அடி வடக்கு புறம் 39 அடி தெற்கு புறம் 49 அடி இதன் மத்தியில் 4070 சதுர அடி நிலத்தை வாங்கினேன். யார் பெயரில் கிரையம் வாங்கப்பட்டது என்றால் எனது அம்மா அழகம்மாள் பெயரில் வழங்கப்பட்டது. மேற்படி 10 அடி சிமெண்ட் பாதைக்கு மேற்கில் தான் அந்த நிலம் வாங்கப்பட்டது என்றால் சரிதான். என்னுடைய கிரைய ஆவணத்தில் பொதுப் பாதைக்காக விடப்பட்டுள்ள நிலத்திற்கு மேற்கில் என்று தான் கிரைய ஆவணம் எழுதப்பட்டுள்ளதா என்றால் ஆமாம் அதில் எத்தனை அடி பாதை போடப்பட்டுள்ளது என்றால் 16 அடி போடப்பட்டுள்ளது. ஒன்னு ரெண்டு வாதிகள் மாலிக் பாஷாவின் சொத்தை தான் கிரயம் வாங்கி உள்ளார்கள் என்றால் சரிதான் அவர்களது கிரைய ஆவணத்திலும் மேற்கு புறம் செக்குப்பந்தி அந்த பொதுபாதை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கறிஞர் முனுசாமி அவர்களின் வீட்டை அடையும் 10 அடி பாதை கிழக்கில் திரும்பி மீண்டும் தெற்கில் வளைந்து நேராக செல்கிறது. மேற்படி பாதையை பார்வையிட நீதிமன்ற ஆணையர் வந்து பார்வையிட்டார் என்று சொன்னால் சரிதான் என் முன்னிலையில் பார்வையிட்டார் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள வரைபடம் மற்றும் அறிக்கை குறித்த விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் என் வீட்டின் எதிரில் 10 அடி பாதையில் ஏதாவது கல் நட்டு உள்ளேனா என்றால் ஆமாம் பிரச்சனை செய்தார்கள் BDO வந்து கல் நட்டார். அந்த கல் வாதிகளின் வீட்டிலிருந்து எத்தனை அடி மேற்கு புறத்தில் உள்ளது என்றால் சுமார் 3 அடி இருக்கும். நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையை காட்டி அதில் உள்ள புகைப்படத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாதைதான் மேற்படி சிமெண்ட் பாதை என்றும் அதில் உள்ள வீடுகள் தன்னுடையது மற்றும் வாதிகளுடையது என்று சாட்சி கூறுகிறார். நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடத்தில் பச்சை வண்ணமிட்டு காட்டப்பட்டுள்ள கல்தான் மேற்படி கல் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள கல் தான் நான் நடப்பட்ட கல் என்றால்

அந்த இடத்தில் BDO அடையாளம் காட்டி கல் நட சொன்னார் அப்போது தரைமட்டத்தில் ஒரு கல் நடப்பட்டது அதை வாதிகள் இரவோடு இரவாக பிடுங்கி விட்டார்கள் எனவே அடையாளத்திற்காக வேண்டி தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள கல் நடப்பட்டது பின்பு அந்த கல்லை எடுத்துவிட்டு தற்போது அது இல்லை. மற்றவர்களுக்கு இடையூறு வராத வகையில் தற்போது தரைமட்டத்தில் கல் உள்ளது. வாதிகள், ஓய்வு பெற்ற அரசு அதிகாரிகள் வயதானவர்கள் அவர்களுக்கு இடையூறு செய்ய வேண்டும் என்று அவர்களை மிரட்டி அந்த கல்லை நட்டு உள்ளேன் என்று சொன்னால் அவர்கள் இரவோடு இரவாக கல்லை அப்புறப்படுத்தியதால் அவ்வாறு நடப்பட்டது. BDO கல் நட சொன்னார் அதனால் தரை மட்டத்தில் கல் நட்டதை வாதிகள் எடுத்துவிட்டார்கள் என்று நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதில் எந்தவித உண்மையும் இல்லை என்றால் சரியல்ல. சிமெண்ட் பாதை உள்ள இடத்தில் எனக்கு 274 சதுர அடி பாத்தியப்பட்டு இருந்திருந்தால் அந்த பாதை அமைக்கும் போது நான் ஆட்சபனை செய்திருப்பேன் என்றால் நான் அப்போது அங்கு இல்லை வெளியில் இருந்தேன். நீதிமன்ற ஆணையர் இணைத்துள்ள புகைப்படத்தில் உள்ள பாதை 10 அடி இருக்குமா என்றால் கழிவுநீர் கால்வாயுடன் சேர்த்து 13 அடி இருக்கும். மேற்படி பாதையில் பெரியார் நகருக்கு பாத்தியப்பட்ட அனைவரும் செல்வார்கள் என்றால் இல்லை வேறு பாதை உள்ளது அதில் சுமார் 10 குடும்பம் பயன்படுத்துகின்றனர். வேறு பாதை எங்கு உள்ளது என்றால் பெரியார் நகர் பாதைக்கு இணையாக தெற்கில் உள்ளது. மேலே குறிப்பிட்டுள்ள பெரியார் நகர் பாதைக்கும் அதில் தெற்கில் தற்போது கூறப்படும் பெரியார் நகர் பாதைக்கும் எவ்வளவு இடைவெளி இருக்கும் என்றால் சுமார் 100 மீட்டர் இருக்கும். மாலிக் பாஷாவுக்கு பாதிக்கப்பட்ட சர்வே எண்.1/6 தான் தற்போது பல்வேறு உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது அதை என்னுடைய பதில் உரையிலும் நான் சொல்லி உள்ளேன் என்று சொன்னால் சரிதான். நான் சர்வே எண் 39- இல் தான் கிரயம் வாங்கியுள்ளேன் சர்வே எண் 1/6 இல் எனக்கு எந்த பாக்கியமும் இல்லை என்றால் உள்ளது. சர்வே எண். 1/6 -இல் எந்த உட்பிரிவில் எனக்கு பாத்தியம் என்றால் சர்வே எண்.1/6K. வா.சா.ஆ 1 ஆ பதிவேட்டில் சர்வே எண். 1/6K மற்றும் 1/6J பாதை என்று உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு செய்துள்ளார்கள். அதில் தற்போது பாதை உள்ளதா என்றால் 13 அடி உள்ளது. சர்வே எண். 1/6K தான் பெரியார் நகர் பாதையில் இருந்து திரும்பும் இடத்தில் உள்ளது என்றால் சரிதான். அந்த பாதையை ஒட்டி உள்ளவர்கள் அனைவரும் கார் வைத்து பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரிதான். சர்வே எண். 1/6K எத்தனை அடி அகலம் நீளம்

உள்ளது என்றால் 12 அடி அகலம் இருக்கும் அந்த பாதை தொடங்கும் இடத்திலேயே ஆக்கிரமித்து வீடு கட்டி உள்ளார்கள், 30 அடி நீளம் இருக்கும். பெரியார் நகர் செல்லும் சிமெண்ட் பாதையும் மேற்படி சர்வே எண்ணில் அமைந்துள்ளது அதில் 16 அடி அகலமும் 20 அடி நீளமும் அமைந்துள்ளது. சர்வே எண். 1/6K-ல் நான் மாலிக் பாஷாவிடம் இருந்து ஏதாவது நிலம் கிரையம் வாங்கி உள்ளேன் என்றால் பத்திரம் எதுவும் இல்லை ஆனால் எங்கள் சுவாதினத்தில் உள்ளது. என்னுடைய கிரைய ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள நீள, அகல கொண்ட 4070 சதுர அடி நிலம் சர்வே எண். 1/6K அமைந்துள்ளது. நான் மேலே சொன்ன 274 சதுர அடி நிலமானது மேற்படி சர்வே எண். 1/6K-ல் தான் அமைந்துள்ளதா என்றால் இல்லை சர்வே எண் 19/31B-யில் அமைந்துள்ளது. எங்களுக்கு மாலிக் பாஷா விற்பனை செய்த 4070 சதுர அடி நிலத்தில் எவ்வளவு நிலம் சர்வே எண்.19/31B-லும் எவ்வளவு நிலம் சர்வே எண். 1/6K- லும் உள்ளது என்றால் 3800 சதுர அடி நிலம் சர்வே எண்.19/31B மற்றும் மீதமுள்ள நிலம் சர்வே எண் 1/6K- லும் அமைந்துள்ளது.

வாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

**முடிவு நேரம் – 04.47 PM**

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

Sd/-XXXX

District Munsif(FAC),
Uthangarai.